முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No**.165/2004

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 12.10.2023 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L.,(Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 12.10.2023 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | A.C.P.ரத்தினசுப்ரமணியம் | வயது.. | 56 |
| தந்தை பெயர்.. | A.C.பழனியாண்டி | கிராமம்.. | புவனகிரி |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கை புவனகிரி வர்த்தக சங்கம் அதன் செயலாளர் என்ற முறையில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிராமாண வாக்குமூலத்தில் என்னுடைய இருப்பிட முகவரி போட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிராதில் வர்த்தக சங்கம் எந்த முகவரியில் இயங்குகிறது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.60 சென்னை உயர்நீதிமன்றத்தின் இரண்டாவது மேல்முறையீட்டின் உத்தரவு என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிராதில் SA.No.24/1990 முடிவின் படி சென்னை உயர்நீதிமன்றம் எங்கள் வர்த்தக சங்கத்தை அங்கிகரித்தது என்ற விவரத்தை செல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

2. சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் பெயரில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இரண்டாவது மேல்முறையீட்டின் உத்தரவுக்கு முன் விசாரணை நீதிமன்றத்தில் ரங்கநாதன் பிள்ளை என்பவர் புவனகிரி வர்த்தக சங்கத்தின் தலைவர் என்ற முறையில் OS NO.15/1985 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றார் சரிதான். அந்த வழக்கின் தீர்ப்பு நகலை வா.சா.ஆ.16 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். OS NO.15/1985 தாக்கல் செய்யும் சமையத்தில் புவனகிரி வர்த்தக சங்கத்தில் எந்த ஒரு பொருப்பிலும் நான் இல்லை என்றால் சரிதான்.

3. OS NO.15/1985 என்ற வழக்கானது சட்டநாதன், டிடி.கலியபெருமாள், ஏ,கே.ராமசாமி, ராஜேந்திரபிரசாத் மற்றும் ஒருவர் மீது அந்த வழக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கின் பிரதிவாதிகள் அவர்கள் தான் வர்த்தக

சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளர் என்றும் ரங்கநாதன் பிள்ளை தலைவர் இல்லை என்ற கட்சியை எடுத்தனர் என்றால் சரிதான். ரங்கநாதன் பிள்ளை வர்த்தக சங்கத்தின் தலைவராக 1978 வரை பதவியில் இருந்தார் என்றால் இல்லை, 1975 வரை இருந்தார். அதன் பின்பு அவர் நீக்கப்பட்டுவிட்டார். **OS NO**.15/1985 என்ற வழக்கில் நான் தான் வர்த்தக சங்கத்தின் தலைவர் என்று கட்சிசெய்தேனா என்றால் அந்த வழக்கில் நான் தரப்பினர் இல்லை.

4. **OS No**.15/1985 என்ற வழக்கின் பிரதிவாதிகள் அவர்கள் தான் சங்கத்தின் செயலாளர் மற்றும் தலைவர் என்று விளம்புகை செய்ய பரிகாரம் கோரியிருந்தனரா என்றால் இல்லை. **OS No**.15/1985 என்ற வழக்கில் வாதியானவர் அந்த வழக்கின் சொத்துக்கள் அனைத்தும புவனகிரி வர்த்தக சங்கத்தின் சொத்துக்கள் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். **OS No**.15/1985 என்ற வழக்கில் பிராதில் வாதியானவர் புவனகிரி வர்த்தக சங்கத்திற்கு சொந்தமான இடத்தில் கட்டிடங்கள் கட்டியுள்ளதாகவும் அதற்காக உறுப்பினர்களிடமும், பொது மக்களிடமும் சந்தா வாங்கி தான் கட்டினார் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் கட்டிடம் கட்டியது உண்மை ஆனால் உறுப்பினர்களிடம் இருந்து மட்டும் தான் பணம் வசூல் செய்யப்பட்டது, பொது மக்களிடம் இருந்து பணம் எதுவும் வசூல் செய்யப்படவில்லை.

5. **OS No**.15/1985 என்ற வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் அந்த வழக்கின் வாதியின் சுவாதீனத்தில் சொத்துக்கள் இல்லை என்று தள்ளுபடி செய்தது என்றால சரிதான். அதை எதிர்த்து மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது என்றால் சரிதான், ஆனால் **OS No**.15/1985 என்ற வழக்கு நிலுவையில் இருக்கும்போதே ரங்கநாதன் பிள்ளை இறந்துவிட்டார் அதனால் அவர் மகன் ஸ்ரீராம் அவருக்காக வழக்கு நடத்தினார். அந்த வழக்கின் மேல்முறையீட்டு ஆன **AS.No**.107/1987 வழக்கில் ரங்கநாதன் பிள்ளை மற்றும் அவருடைய வாரிசுகளிடம் தான் சுவாதீனம் உள்ளதாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் ரங்கநாதன் பிள்ளை அனுமதி பெற்று தான் சுவாதீனத்தில் இருந்தார் என்றும் அவரை சட்டபடி தான் காலி செய்யவேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

6. ரங்கநாதன் பிள்ளைக்கு அனுமதி யார் கொடுத்தது என்றால் புவனகிரி வர்த்தக சங்கம். அப்போது ரங்கநாதன் பிள்ளைக்கு தான் புவனகிரி வர்த்தக சங்கத்தின் தலைவர் என்றால் சரிதான். **AS.No**.107/1987 யை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் **SA.No**.24/1990 தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் **SA.No**.24/1990 வழக்கில் 3.7.2002-ல் தீர்ப்புரை வழங்கப்பட்டது என்றால் சரிதான். சென்னை உயர்நீதிமன்றத்தில் **SA.No**.24/1990 தீர்ப்பில் எங்கள் சங்கம் தான் புவனகிரி வர்த்தக சங்கம் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

7. SA.No.24/1990 தீர்ப்புரையின் விவரத்தை நான் தெரிந்துக்கொண்டேன். SA.No.24/1990 தீர்ப்புரையின் பத்தி 8 -ல் மேல்முறையீட்டாளர்கள் தான் சங்கத்தை உருவாகினார்கள் என்று யூகித்துக்கொண்டாலும் மேல்முறையீட்டாளர்கள் தான் சட்டரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் என்று நிரூபிக்கும் பட்சத்தில் தான் அவர்கள் எதிர்மனுதாரர்களிடம் இருந்து சுவாதீனத்தை பெற முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். SA.No.24/1990 தீர்ப்புரையின் பத்தி 9 -ல் " It is open to the owners to move the concerned court for delivery of possession in accordance with law". என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் இந்த வழக்கை புவனகிரி வர்த்தக சங்கத்தின் செயலாளர் என்ற உரிமையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

8. சங்கத்தின் பெயரில் வாங்கிய கிரண ஆவணம் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் வர்த்தக சங்கத்தின் தற்கால தலைவரிடம் சுவாதீனம் ஒப்புக்கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் தற்கால தலைவரும பிற்கால தலைவரும் ஆண்டு அனுபவித்து கொள்ளவேண்டியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- S.Suganiya Sri
Principal District Munsif (FAC)
Chidambaram